**செய்தி வெளியீடு எண்: 589** **நாள்: 08.10.2012**

<u>வணிக வரித் துறை</u>

<u>பத்திரிகைச் செய்தி</u>

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களது அறிவுரைகளுக்கிணங்க, மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு. B V ரமணா அவர்கள் **08.10.2012** அன்று வணிகவரித்துறை அலுவலர்களுடன் சென்னையில் பணித்திறன் கலந்தாய்வு மேற்கொண்டார். அவ்வமயம் திரு. சுனீல் பாலிவால், இ.ஆ.ப., செயலர், வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை மற்றும் டாக்டர். கே. மணிவாசன், இ.ஆ.ப., வணிக வரி ஆணையர் ஆகியோர் உடனிருந்தனர். கலந்தாய்வின் போது தலைமையக கூடுதல் ஆணையர்கள் மற்றும் சென்னை கோட்டத்தினைச் சார்ந்த அனைத்து நிர்வாக மற்றும் செயலாக்கப்பிரிவு இணை ஆணையர்கள் பங்குபெற்றனர்.

கலந்தாய்வின் போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், **2012–13**ஆம் நிதியாண்டில் செப்டம்பர் திங்கள் முடிய ரூபாய் **23,142** கோடிகள் மொத்த வரியாக வசூலிக்கப்பட்டது எனவும், சென்ற ஆண்டின் இதே காலகட்டத்தில் ஈட்டப்பட்ட வரி வருவாயான ரூபாய் **18,336** கோடிகளை ஒப்பிடுகையில் இவ்வருவாயானது **26** சதவீத வளர்ச்சி விகிதத்தினை பிரதிபலிக்கிறது எனக் குறிப்பிட்டார்கள். மேலும், தொலைநோக்கு பார்வையுடன் செயல்படும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களது பல்வேறு ஏற்றமிகு நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக **2012–13** ஆம் நிதியாண்டின் நிர்ணயிக்கப்பட்ட வரி வசூல் இலக்கான ரூபாய் **51,332** கோடிகளை தாண்டி கூடுதலாக அரசிற்கு வரி வசூல் செய்து ஏற்ற பாதையில் வீறு நடையிட அனைத்து அலுவலர்களும் அயராது பணியாற்றிட வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

பணித்திறன் மேம்பாடு பற்றி பேசுகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாதாந்திர வரி வசூல், மாதாந்திர நமூனாக்கள் பெற்று உடனுக்குடன் சரிப்பார்த்தல், இறுதி வரி விதிப்பு செய்தல், நிலுவை வரி வசூல், கடைத்தணிக்கை போன்ற பணிகளில் அலுவலர்கள் சிரமேற்கொண்டு மிக்க சிரத்தையுடன் பணியாற்றி அரசிற்கு அதிக அளவில் வருவாயை பெற்றுத்தர வேண்டுமென வலியுறுத்தினார்கள். மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களது அரசு பொதுமக்களுக்கு அறிவித்த பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்த வணிகவரித்துறை மூலம் ஈட்டப்படும் வரி வருவாயினை உபயோகித்து வரும் இத்தருணத்தில், வரி வசூல் பணிகளை திறம்படவும், செம்மையாகவும், சிறப்புடனும் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்கள். வரி நிர்வாகத்தை முடுக்கி அலுவலர்கள் திறமையுடன் செயல்பட்டு வரி வசூல் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரைகள் வழங்கினார்கள்.

வணிகவரித்துறையின் சிறந்த செயல்பாட்டிற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள், வரி வசூல் பணியை தீவிரப்படுத்தும் முகத்தான், ரூபாய் **1.12** கோடி செலவில் **17** புதிய வாகனங்கள் **2011–12** ஆம் ஆண்டில் வழங்கியதையும், **2012–13** ஆம் ஆண்டிற்கு, **12** வாகனங்கள் வாங்க உத்தரவிட்டுள்ளதையும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

வணிகவரித்துறையின் சோதனைச்சாவடிகள் செம்மையாக செயல்படும் முகத்தான் அவற்றை நவீனமயமாக்கும் பொருட்டு இந்நிதியாண்டில் ரூபாய் 33.36 கோடிகள் வழங்கி மாண்புமிகு தமிழக முதல்வர் ஆணையிட்டுள்ளதையும் 2011–12 ஆம் நிதியாண்டில் வாடகை கட்டிடத்தில் இயங்கி வரும் 34 வணிகவரித்துறை அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் அமைக்க ரூபாய் 20.15கோடிகள் வழங்கி உத்தரவு பிறப்பித்ததையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

மேலும், துறையினது சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் உதவி ஆணையர், துணை வணிகவரி அலுவலர், உதவியாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஆகிய பதவிகளில் உள்ள 1325 காலிப்பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக நேரடி நியமனம் மூலம் நிரப்ப துரித நடவடிக்கை மேற்கொள்ள ஆணையிட்டுள்ளார்கள் எனவும் அறிவித்தார்கள்.

துறையின் திறமையான செயல்பாட்டிற்கும் சிறப்பான நடவடிக்கைகளுக்கும் வணிகர்கள் எளிமையான முறையில் வரி செலுத்துவதற்கும் தேவையான அனைத்து வசதிகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களது தலைமையிலான இவ்வரசு எப்பொழுதும் செய்யத்தயங்காது என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்கள்.

€ € € € €

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**